வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 5/2024

வழக்கு சாட்சி – ம.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. Dr.ஆசிக் அமின் | தொழில் | :: மருத்துவர் |
| த/ பெயர் | :: முகமது அலி ஜின்னா | வயது | :: 48 |
| கிராமம் | :: இராமநாதபுரம் | | |
| தாலுகா | :: இராமநாதபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 12.02.2026.

**முதல் விசாரணை** (நேரம் : காலை 11.35 மணி)

நான் இராமநாதபுரம், ஆசி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. அதனடிப்படையில் ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரர் பாலகிருஷ்ணன் எங்கள் மருத்துவமனையில் 14.11.2021 ம் தேதி இரவு 07.16 மணிக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தலைக்காயம் இருந்தது. வலது தொடை எலும்பில் முறிவும், வலது கால் எலும்பில் முறிவும் இருந்தது. 21.11.2021 ம் தேதி அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 03.01.2022 ம் தேதி சிகிச்சை முடிந்து அவர் விடுவிக்கப்பட்டார். அவர் தொடர்ந்து தற்போதும் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டு வருகிறார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று கருத்து தெரிவித்து காயச்சான்று வழங்கியுள்ளேன். அதனை நான் கொண்டு வந்துள்ளேன். **அந்த காயச்சான்று நகல் சா.சா.ஆ.1.** அவருக்கு ஏற்பட்ட தலைக்காயம் இன்னமும் முழுமையாக குணமாகவில்லை. அவர் எங்கள் மருத்துவமனைக்கு அவரது தகப்பனாரின் உதவியுடன் தான் சிகிச்சைக்கு வருகிறார். அவர் வீல் சேரில் தான்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.12 17:21:19 +0530

வருகிறார். சில அடிகளுக்கு மேல் அவரால் நடக்க முடியவில்லை. அவர் ஆயுள் முழுவதும் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். தலைக்காயம் முழுமையாக குணமடைய வாய்ப்பில்லை. மனுதாரரின் Case Sheet கொண்டு வந்துள்ளேன். **அதன் நகலை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.2** வரிசை ( எண்ணிக்கை).

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

மனுதாரர் பாலகிருஷ்ணன் எங்கள் மருத்துவமனையில் 14.11.2021ம் தேதி இரவு 07.16 மணிக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. வலது தொடையிலும், வலது காலிலும் எலும்பு முறிவு இருந்தது. தலைக்காயத்திற்கு Neuro Surgeon உடனடியாக சிகிச்சை அளித்தார். செயற்கை சுவாசம் அளித்து வென்டிலேட்டரில் வைக்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை முடிந்து 03.01.2022ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவர் விடுவிக்கப்படும்போது அவருக்கு வழங்கப்பட்ட மருத்துவ ஆலோசனைகளை அவர் முறையாக பின்பற்றியுள்ளார். மனுதாரர் எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதது முதல் Discharge செய்யப்படும் வரை உள்ள மருத்துவ ஆவணங்களை தான் தாக்கல் செய்துள்ளேன். அதன் பிறகு அவர் எங்கள் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை எடுத்து வருவதற்கான ஆவணங்களை நான் கொண்டு வரவில்லை. 03.01.2022ம் தேதிக்கு பிறகும் மனுதாரருக்கு X-Ray மற்றும் Scan எடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை தற்போது நான் கொண்டு வரவில்லை, தேவைப்பட்டால் கொண்டு வருகிறேன். மனுதாரருக்கு காயங்கள் முழுமையாக குணமடைந்துவிட்டதா? இல்லையா? என்பது பற்றியும், அவர் தொடர் சிகிச்சை எடுத்துகொண்டு வருகிறாரா? என்பது பற்றியும், தற்போது எடுக்கப்பட்ட X-Ray மற்றும் Scan ஆகியவற்றை பார்த்து தான்

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.12 17:21:24 +0530

சொல்லமுடியும் என்றும், சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்களை பார்த்து அதுபற்றி கூறமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.12 17:21:29 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.